

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli


www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 196 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – மாசி 14 – வியாழக்கிழமை 26 பிப்ரவரி 2026 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 196: Thiruvalluvar Year - 2057 - Maasi 14 - Thursday 26 February 2026 - Dak 16 Pages ₹ 5.00









## பா.ஜ.க. எப்போதுதான் வன்முறையைவிட்டு வளர்ச்சியைப் பற்றி பேசும்?

# கன்னியாகுமரி மாவட்ட வளர்ச்சிக்கு கணக்கில்லாத் திட்டங்கள்!



## திட்டச் செயல்பாடுகளையும் பயன்களையும் விளக்கி நாகர்கோவில் அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேருரை!

**நாகர்கோவில், பிப். 26 -**

**நாகர்கோவிலில் நடைபெற்ற அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது, கன்னியாகுமரி மாவட்ட வளர்ச்சிக்கு கணக்கில்லாத் திட்டங்களை நிறைவேற்றியிருப்பதாகக் கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.2.2026) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்டு, ஆற்றிய உரை வருமாறு:-

கன்னியாகுமரி மாவட்ட அரசு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இந்திய துணைக்கண்டத்தின் தொடக்கமான வள்ளுவ முனை இருக்கும் குமரி முனைக்கு நான் வந்திருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், தனித்துவமான பண்பாடு, உணவு, வட்டார வழக்கு, கொட்டிக் கிடக்கும் இயற்கை அழகு நிறைந்திருக்கக்கூடிய மாவட்டம் இந்த மாவட்டம்.

எல்லைப் போராட்ட வீரர் மார்ஷல் நேசமணி, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், பொதுவுடைமை இயக்க தீரர் தோழர் ஜீவா, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை இப்படி பல பேராளுமைகளை கொண்டிருக்கக்கூடிய பல்வேறு தலைவர்களை தந்த மாவட்டத்திற்கு நான் வந்திருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்று அறிவியலில் சிறந்து இஸ்ரோ அமைப்புக்கு எத்தனையோ தலைவர்களை தந்த கன்னியாகுமரிக்கு நான் வந்திருக்கிறேன். இப்படி பல்வேறு பெருமைகள் கொண்ட மாவட்டத்தில், இந்த விழாவை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறார் நம்முடைய அமைச்சர் மனோ தங்கராஜ் அவர்கள். பால்வளத்துறையை சிறப்பாக கவனித்துக் கொள்ளக்கூடிய ஒரு வெள்ளை உள்ளத்திற்கும், கொள்கை திறத்திற்கும் சொந்தக்காரரான அவருக்கு பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

### சிறப்பாக செயல்படும் மாவட்ட ஆட்சியருக்கு வாழ்த்துகள்!

அதேபோல், இதுவரை எந்த மாவட்டத்திலும் இல்லாத வகையில், 3 இலட்சத்து 12 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கக்கூடிய இந்த மாபெரும் விழாவை மிகுந்த எழுச்சியோடு, சிறப்பாக ஒருங்கிணைத்திருக்கக்கூடிய நம்முடைய மாவட்டத்தின் ஆட்சியர் திருமதி அழகுமீனா, அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்கள்! வாழ்த்துகள்! சிறப்பாக செயல்படுகின்ற மாவட்ட ஆட்சியர்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவிற்கு முத்திரை பதிக்கும் வகையில் அவர் செயல்படுகிறார். உங்களுடைய கரவொலியைப் பார்த்தாலே அதற்கு சாட்சியாக இருக்கிறது. இன்னும் கொஞ்சம் பலமாக கரவொலி எழுப்பி அவருக்கு நம்முடைய வாழ்த்துகள் சொல்லவேண்டும்! அவருக்கும், அவருக்குத் துணை நிற்கக்கூடிய மாவட்ட அரசு அலுவலர்களுக்கும், அத்தனை பணியாளர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.2.2026) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் நடைபெற்ற அரசு விழாவில், 632 கோடியே 35 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் செலவிலான 1,217 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 294 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 1,237 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் திருமதி பி.கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், த.மனோ தங்கராஜ், முனைவர் டி.ஆர்.பி.ராஜா, விஜய் வசந்த் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.ஜி.பிரின்ஸ், எஸ்.ராஜேஷ்குமார், திருமதி தாரகை கத்பர்ட், மேயர் மகேஷ், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆர்.அழகுமீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஏழை மக்களின் குரலாய் ஒலித்த பொன்னப்ப நாடார்!

நேற்று காலை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நான் வந்தேன். இலங்கை வாழ் தமிழ் சொந்தங்களுக்குரிய குடியிருப்புகள் திறப்பு விழா! பேரறிவுச் சிலையின் வெள்ளி விழா வளைவு (Arch), தியாகி பொன்னப்ப நாடார் அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலை ஆகியவற்றை திறந்து வைத்து விட்டுதான் இன்றைக்கு இங்கே இந்த மேடைக்கு வந்திருக்கிறேன்.

தியாகி பொன்னப்ப நாடார் அவர்களைப் பற்றி சொல்ல வேண்டும் என்றால், விடுதலைப் போராட்ட தியாகிகளில் ஒருவர். குமரியை தமிழ்நாட்டோடு இணைப்பதற்கான போராட்டத்தில், மார்ஷல் நேசமணி அவர்களின் போர்ப்படைத் தளபதியாக விளங்கியவர் அவர். திருவிதாங்கூர் கொச்சி சட்டமன்றப் பேரவைக்கு இரண்டு முறையும், தமிழ்நாடு சட்டமன்ற பேரவைக்கு மூன்று முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டவர். தமிழ்நாடு சட்டமன்றத்தில், எதிர்க்கட்சித் தலைவராக இருந்து மக்களுக்கு பணியாற்றியவர். எளிமையாக வாழ்ந்து, ஏழை மக்களின் குரலாக ஒலித்து, ‘குமரி கோமேதகம்’ என்று மக்களால் போற்றப்பட்டவர்.


அத்தகைய சிறப்புக்குரிய தியாகி பொன்னப்ப நாடார் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி, நாகர்கோயில் மாநகராட்சி பூங்காவில், 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டிருக்கக்கூடிய முழு உருவ வெண்கலச் சிலையை திறந்து வைத்ததில் நான் மிகுந்த பெருமைப்படுகிறேன்.


தொடர்ச்சி 3–ஆம் பக்கம்


## கொள்கைக் கனல் அகத்துளே தீயாய் மூண்டு தகிக்க முகத்திலே புன்னகையுடன்

# அமைதியாக வலம் வந்த அரசியல் எரிமலை!

## தோழர் நல்லகண்ணு மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கமிகு இரங்கல்!



**சென்னை, பிப்.26 -**

**“கொள்கைக் கனல் அகத்துளே தீயாய் மூண்டு தகிக்க முகத்திலே புன்னகையுடன் அமைதியாக வலம் வந்த அரசியல் எரிமலை தோழர் நல்லகண்ணு” என்று அவரது மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள உருக்கமிகு இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

“எனக்கு ஒரு கண்ணில் சரிவரப் பார்வை இல்லை என்றாலும், அகத்தில் மற்றொரு கண் இருக்கிறது. அதுதான் நல்லகண்ணு” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கண்ணாகப் போற்றப்பட்ட முதுபெரும் தலைவர் - தோழர் நல்லகண்ணு அய்யா அவர்கள் மறைவுற்றார் என்ற செய்தி நம்மையெல்லாம் கடும் துயரத்திற்கு ஆளாக்கியுள்ளது.

நம் சமகாலத்தில் வாழ்ந்த சமரசமற்ற போராளி; நாட்டின் விடுதலைக்காக, பாட்டாளி வர்க்கத்தின் நலனுக்காக தம் இனிய வாழ்வின் பெரும் பகுதியை ஈகம் செய்த தியாகப் பெருஞ்சீலர்!

சிறை, சித்திரவதை, வலிகள் நிறைந்த வாழ்க்கை என்று எத்தனை இடர்கள் வந்தாலும்

**“சுட்டுப் பொசுக்கினாலும் - தோழர்களைத்**
**தூக்கினில் ஏற்றினாலும்**
**விட்டுப்பிரியாது - செங்கொடி**
**வீரம் குறையாது”**

என்று தோழர் ஜீவா முழங்கியதைப் போல கொள்கை உறுதி குலையாமல் குன்றமென நிமிர்ந்து நின்ற பண்புக்குரியவர் தீரமிகு தோழர் நல்லகண்ணு.

### போராட்டக்களங்களில் தலைவர் கலைஞரோடு தோளோடு தோள் நின்றவர்!

கொள்கைக் கனல் அகத்துளே தீயாய் மூண்டு தகிக்க, முகத்திலே புன்னகையுடன் அமைதியாக வலம் வந்த அரசியல் எரிமலை அவர்!

பொதுவுடைமைக் கருத்தியலும், திராவிட இயக்கக் கருத்தியலும் சமூக மாற்றத்துக்கான இரட்டைக்குழல் துப்பாக்கியாகச் செயல்பட வேண்டிய கோட்பாட்டுத் தோழமைகள் என்பதில் எப்போதுமே உறுதியாக இருந்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் தமது ஆட்சிக் காலத்தில் தோழர் நல்லகண்ணு அவர்களுக்கு அம்பேத்கர் விருதை வழங்கிச் சிறப்பித்தார். நமது ‘திராவிட மாடல்’ அரசின் சார்பில் தோழர் அவர்களுக்குத் ‘தகைசால் தமிழர்’ விருதை வழங்கும் வாய்ப்பைப் பெற்றது எனது பெரும் பேறு!

எப்போதும் என்மேல் அன்பும் பாசமும் கொண்டவராக இருந்தார். திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு உருவாக்கிய திட்டங்களை

## அரசு மரியாதையுடன் இறுதி அஞ்சலி!

முத்தமிழறிஞர் கலைஞருடன் என்றென்றும் இனிய நட்பைப் பூண்டிருந்தவர். பொடா, எஸ்மா, டெஸ்மா போன்ற அடக்குமுறைச் சட்டங்களுக்கு எதிரான போராட்டக் களங்களில், தலைவர் கலைஞருடன் தோளோடு தோள் நின்று களமாடியவர்.

மனப்பூர்வமாக வரவேற்றார். அய்யாவை அவரது ஒவ்வொரு பிறந்தநாளிலும் சந்தித்து வாழ்த்து பெறுவதை நான் வழக்கமாக வைத்திருந்தேன்.

### அப்பழுக்கற்ற தலைவர்!

தோழர் நல்லகண்ணு அய்யா அவர்கள் வாழ்ந்த காலத்தில் நாம் வாழ்ந்தோம் என்பது நமக்குப் பெருமை. அவர் பெற்ற விருதுகள், பரிசுகள் எவையானாலும், அவற்றோடு தொகை அனைத்தையும் கட்சிக்காகவும், மக்கள் நலனுக்காக அரசிடம் ஒப்படைத்த அப்பழுக்கற்ற தலைவர் அவர்!

“தான் வேறு, இயக்கம் வேறு என்று பிரித்துப் பார்க்காமல், இயக்கத்திற்காக இயக்கமாகவே வாழ்ந்தவர்” என்று அவரது நூற்றாண்டு விழாவில் நான் குறிப்பிட்டது இன்றும் நினை வலைகளாக வந்து என் நெஞ்சில் மோதுகிறது.

தோழரின் மறைவால் வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத் தோழர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலும், ஆறுதலும்!

மறக்க முடியாத அந்த மாமனிதரின் வாழ்வே நமக்காக அவர் விட்டுச் சென்றிருக்கும் மகத்தான செய்தி. அதுவே நமக்கு வழிகாட்டும் ஒளியாகட்டும்! பாட்டாளி மக்களுக்காகவே வாழ்ந்து நிறைந்த பகட்டில்லாத் தோழர் நல்லகண்ணு அவர்களின் நினைவும், புகழும் என்றென்றும் காலத்தால் அழியாத கல்வெட்டாக மக்கள் மனதில் நிலைத்திருக்கும்! தமிழ்நாட்டின் உயரிய விருது பெற்ற நம் ‘தகைசால் தமிழரை’ இனிய தோழரை முழு அரசு மரியாதையுடன் செவ்வணக்கம் செலுத்தி வழியனுப்பி வைப்போம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.